R 4915

## ஹா! ஆசிக்கிறேன்

கீழ்ப்படிந்து தாழ்மையிலே அன்புடன் உம் சித்தம்செய்ய
ஆசிக்கிறேன் ! ஆசிக்கிறேன்! உம்மிடமே ஜெபிக்கின்றேன்,
உதவிடும் எம் நேச இரட்சகரே! ஆண்டவரே!
என்னையே மகிழ்ச்சியான செய்தியாக ஆக்கிவிட
என்னையும் பயன்படுத்தும், நானே ஆசிக்கிறேன்
பசிதாகம் கொண்டுள்ள மானிடர்கள் யாவருமே
உம்முடைய இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டுமன்றோ!
ஆசிக்கிறேன்! ஆசிக்கிறேன்!
எனை பயன்படுத்த யாசிக்கிறேன்
நீரே என் கரம் பற்றி நடத்திச்செல்ல ஆசிக்கிறேன்
பாதம் ஒற்றி நடக்கவேண்டும், நீர்மட்டும் நடத்தும் என்னை
செய்திசொல்ல வாயிலிலே காத்திருக்கேன் இயேசுவே நான்,
ஆணையிடும், உம் ஆவி தந்து நிரப்பிவிடும்
எனை முழுதும், சித்தம் செய்திடவும் செய்திசொல்ல
தயார்ப்படுத்தும்
— அமைதியுடன் உம்மில் நான்
அமைதியாக காத்திருக்கேன் இன்னமுமே
என்னதான் கடினமான வேலை என்றபோதிலுமே

நீர் செய்தவண்ணம் செய்திடவே வழிகாட்டும் அன்புளமே!
இப்பாருலகம் உம் ஆவி அறிந்துகொள்ள ஆசிக்கிறேன்
ஆசிக்கிறேன் பூமி எல்லாம் யாவே புகழ் பாடவேண்டும்
பாருலக ஆஸ்திகளின் ஆசைதனை விட்டொழித்து
நீர் நியமித்த வழிதனிலே நடந்திடவும் ஆசிக்கிறேன்
மீட்புக்கான ஒவ்வொருஅடியையும்
உம்முடனே எடுத்துவைத்து
பாடுபட்டு மகா பரிசுத்தஸ்தலந்தனில் நிற்க ஆசிக்கிறேன்
மகிழ்வுடனே பலிசெலுத்திஆனந்த களிப்புடனே
உம் வழியில் யாம் செல்ல ஆசிக்கிறேன் ஆசிக்கிறேன்
என் விளக்கை சுத்தம்செய்து எண்ணெயினால் நிரப்பிவிட்டீர்
'வா என் அன்பே! உன் பிரயாசம் விட்டொழித்து
சுதந்தரத்தில் பங்குகொள்வாய் !'
என்றே என் மணவாளன்
என்னை அழைக்கும் சத்தம் கேட்கும் ! நானறிவேன் !

– Dr.*ஆக்னஸ் ஹாவிலண்ட்*